No. of Printed Pages : **7**

**5975**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# பகுதி - III — சிறப்புத் தமிழ்
# Part - III — ADVANCED LANGUAGE — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** தொல்காப்பியம் கூறும் இலக்கணங்கள் :

(அ) 7 (ஆ) 3 (இ) 9 (ஈ) 5

**2.** ‘வேளாண் வேதம்’ என்று அழைக்கப்படும் நூல் :

(அ) நாலடியார் (ஆ) திருக்குறள்

(இ) ஆசாரக்கோவை (ஈ) பழமொழி நானூறு

**3.** தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் :

(அ) சீவகசிந்தாமணி (ஆ) சிலப்பதிகாரம்

(இ) வளையாபதி (ஈ) மணிமேகலை

[ திருப்புக

4. சூளாமணியை இயற்றியவர் :

(அ) திருத்தக்கதேவர் (ஆ) நாதகுத்தனார்

(இ) வீரமாமுனிவர் (ஈ) தோலாமொழித் தேவர்

5. உவகை என்ற மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய களமாக தொல்காப்பியர் கூறுவது :

(அ) கொடை (ஆ) பெருமை (இ) விளையாட்டு (ஈ) புதுமை

6. ஒரு கதாபாத்திரம் தனது எண்ண ஓட்டங்களாகக் கதை நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும் வடிவத்தில் கதைப்பகுதி அமைவது __________ எனப்படும்.

(அ) நனவோடை முறை

(ஆ) காட்சித் துணுக்கு முறை

(இ) இடையில் பிரித்துச் சொல்லும் முறை

(ஈ) இணையாகப் பிரித்துச் சொல்லும் முறை

7. பொருந்தாத இணையைக் கண்டறிக :

(அ) அ. மாதவையா - பத்மாவதி

(ஆ) ஆர்.ஷண்முகசுந்தரம் - நாகம்மாள்

(இ) பாரதியார் - சந்திரிகை

(ஈ) பாமா - ஆனந்தாயி

8. எழுத்தாளனின் படைப்பாளுமையை நிருணயிக்கும் அளவீடு :

(அ) உள்ளடக்கம் (ஆ) மொழிநடை

(இ) உரையாடல் (ஈ) கதைப்பின்னல்

9. மார்க்ஸிம் கார்க்கி பிறந்த ஊரான நிழ்னி நோவோகார்டு உள்ள நாடு :

(அ) ரஷ்யா (ஆ) அமெரிக்கா

(இ) ஜப்பான் (ஈ) சீனா

**10.** 'நாடகவியல்' என்னும் நூலின் ஆசிரியர் :

(அ) பம்மல் சம்பந்தனார் (ஆ) சங்கரதாச சுவாமிகள்

(இ) மதுரகவி பாஸ்கரதாஸ் (ஈ) பரிதிமாற் கலைஞர்

**11.** இந்தியாவில் மூவகை அரங்கை அறிமுகப்படுத்தியவர் :

(அ) பெர்டோல்ட் பிரெக்ட் (ஆ) விஜய் டெண்டுல்கர்

(இ) பாதல் சர்க்கார் (ஈ) கிரிஷ் கர்னாட்

**12.** தியாக பூமி புதினத்தின் ஆசிரியர் :

(அ) இராமலிங்கனார் (ஆ) கல்கி

(இ) வடுவூர் துரைசாமி (ஈ) ராஜாஜி

**13.** அவன் **வந்து பார்த்துச்** சென்றான் - இத்தொடரில் தடித்த எழுத்துகளில் இடம் பெற்றுள்ளவை :

(அ) முற்றெச்சங்கள் (ஆ) பெயரெச்சங்கள்

(இ) வினையெச்சங்கள் (ஈ) வினைமுற்றுகள்

**14.** புடல்காய் என்ற சொல்லுக்குரிய வேரைத் தேர்ந்தெடுக்க :

(அ) புழை (ஆ) புடல் (இ) புடலை (ஈ) புழல்

**15.** ரேடியோ என்ற சொல்லுக்கு வானொலி என்ற தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்கி அளித்தவர் :

(அ) டி.கே. சிதம்பரனார் (ஆ) வெ. நல்லதம்பி

(இ) டி.கே. பட்டம்மாள் (ஈ) தென்கச்சி கோ. சுவாமிநாதன்

**16.** பாலராமாயணத்தை இயற்றியவர் :

(அ) சேக்கிழார் (ஆ) ர. அய்யாசாமி

(இ) வெ. நல்லதம்பி (ஈ) கம்பர்

[ திருப்புக

**17.** ஜெயகாந்தனால் எழுதப்படாத நூல் :

(அ) தண்ணீர் தண்ணீர்

(ஆ) உன்னைப்போல் ஒருவன்

(இ) சில நேரங்களில் சில மனிதர்கள்

(ஈ) யாருக்காக அழுதான்

**18.** கட்டைக்கூத்து என்று அழைக்கப்படும் கலை :

(அ) தெருக்கூத்து (ஆ) ஒயிலாட்டம்

(இ) தோல்பாவைக் கூத்து (ஈ) மரக்கால் ஆட்டம்

**19.** அலெக்சாண்டர் கிரஹாம்பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்த ஆண்டு :

(அ) 1878 (ஆ) 1876 (இ) 1768 (ஈ) 1786

**20.** செல்பேசி, டேப்லெட், திறன்பேசி போன்ற கருவிகளில் இயங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பயன்பாட்டு மென்பொருள் :

(அ) பைத்தான் (ஆ) விண்டோஸ் (இ) ஜாவா (ஈ) செயலி

## பகுதி - II

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**21.** அறம் என்ற சொல்லை வரையறுக்கவும்.

**22.** கூடாவொழுக்கம் என்பது யாது ?

**23.** மணிமொழிக்கோவை என்பதில் அமைந்த நூல்கள் யாவை ?

**24.** பன்னிரு திருமுறை நூல்கள் யாவை ?

**25.** சாகித்ய அகாதெமி விருது பெற்ற புதினங்களுள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

**26.** நாடகத்துறையின் புதிய பரிமாணத்திற்குக் காரணமாக அமைந்தவர்கள் யாவர் ?

**27.** கருவிசார் கலைகள் என்பவை எவை எவை ?

**28.** தமிழின் தொன்மைச் சிறப்புக்குச் சான்றுகள் தருக.

**29.** கணினியிலிருந்து திறன்பேசி எவ்வகையில் வேறுபடுகிறது ?

**30.** வேர்ச்சொல் ஆய்வின் தோற்றம் பற்றி எழுதுக.

## பகுதி - III

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**31.** தொல்காப்பியர் குறிப்பிடும் உரிப்பொருள்கள் ஏழனைக் குறிப்பிடுக.

**32.** பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அறநூல்கள் யாவை ?

**33.** அன்றாடச் செயல்களை எவ்வாறு தொடங்க வேண்டும் என ஆசாரக்கோவைப் பாடல் கூறுகிறது ?

**34.** இலட்சியவாதப் புதினங்கள் - குறிப்பு வரைக.

**35.** புதினம் எழுதுவதில் மொழிப்பயன்பாடு குறித்து எழுதுக.

**36.** நவீன நாடகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த பயிற்சிப் பட்டறைகள் எவை ?

**37.** பெண்ணிய அரங்கச் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

[ திருப்புக

**38.** நாட்டார் அரங்கக் கலைகள் யாவை ?

**39.** 1952, நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தைப் பற்றி எழுதுக.

**40.** வியல் - வியர் - வேர் - விளக்குக.

## பகுதி - IV

குறிப்பு : பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**41.** (அ) தமிழ்க்கவிதையின் போக்குகள் குறித்து விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) சங்ககால வணிகம் சிறந்திருந்தது என்பதைப் பட்டினப்பாலை வழிநின்று விளக்குக.

**42.** (அ) தமிழகத்தில் பக்தி நெறி பரவக் காரணமாகயிருந்த சமய இலக்கியங்கள் பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) தமிழ்ப்புதினங்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

**43.** (அ) புதினம் எழுதும் உத்திகளை வகைப்படுத்துக.

**அல்லது**

(ஆ) வந்திருந்த விருந்தாளிகளை அவர்கள் அறியாதபடி கூர்ந்து நோக்கி, தாய் தனக்குத் தானே எவ்வாறு மதிப்பிட்டாள் ?

**44.** (அ) ஒரு திரைப்படம் கலைத்தன்மை வாய்ந்தது என எவ்வாறு கருதப்படுகிறது ?

**அல்லது**

(ஆ) நவீன நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்கவும்.

**45.** (அ) திராவிட மொழிகளும் ஆங்கிலமும் தொடரமைப்பில் மாறுபடுவதை எவையேனும் ஐந்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) மொழிப்பயன்பாட்டுக் கருவிகள் பற்றி விளக்குக.

**46.** (அ) தொலைக்காட்சியின் தோற்றம் மற்றும் அதில் ஒளிபரப்பப்படும் பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றிக் கட்டுரை வரைக.

**அல்லது**

(ஆ) ஊடகச் சட்டங்களுள் எவையேனும் ஐந்து சட்டங்கள் குறித்து எழுதுக.

**47.** (அ) செயலிகளின் வரலாற்றைச் சுருக்கி வரைக.

**அல்லது**

(ஆ) தமிழ் பிற திராவிட மொழிகளுடன் வேர்ச்சொல் ஆய்வில் எவ்வாறு பொருந்தியுள்ளது ? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**- o O o -**